ரூபாய்க்குமேல் நிச்சயமாக செலவாகும். மாநில அரசு தன்னுடைய நிதியைக்கொண்டுதான் ஒவ்வோர் ஆண்டும் செலவு செய்ய முடியும். எனவே, முகத்துவாரத்தை ஆழப்படுத்துவதற்காக ஆயிரம் கோடி ரூபாயை யாரும் ஒரே ஆண்டில் செலவு செய்ய முடியாது. எனவேதான், Green Climate Fund என்று சொல்லக்கூடிய பசுமை நிதிக்கு மாநில அரசு ஒப்புதல் அளித்து, concrete proposal ஒன்று மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. எனவே 2, 3 ஆண்டுகளில் நிச்சயமாக எல்லா முகத்துவாரங்களும் ஆழப்படுத்தி, அகலப்படுத்தப்படும். கடல் அரிப்பு ஏற்படாமல் தடுப்பதற்கும், மீன் இன விருத்தி ஏற்படுவதற்கும் ஒரு வடிகாலாக வாய்க்கால்கள் அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 266, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

266—

கால்நடை மருத்துவமனை

***12639—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, ஜீனூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜீனூர் கிராமத்தில் 3,156 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளன. அரசாணை எண் 9, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 23–1–2018–ன்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய ஜீனூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் 2 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் செலவில் 29–3–2018 அன்று புதியதாக தோற்றுவிக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால்நடை மருத்துவமனை வேண்டுமென்று கேட்டுள்ளார்கள். அங்கே கால்நடை மருத்துவமனையை நேரடியாக அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.*

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, ஜீனூர் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க வேண்டி, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கேட்கப்பட்டது இந்தக் கேள்வி. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பின்படி கடந்த 29–3–2018 அன்றுதான் கால்நடை கிளை நிலையம் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, மேற்படி கிராமத்தைச் சுற்றி இருக்கக்கூடிய 20–க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள கால்நடைகளினுடைய அடர்வு மற்றும் அவற்றின் நலன் கருதி, பொதுமக்களுடைய சிரமத்தையும் கருதி, மேற்படி கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி தொகுதியில் சுமார் 56,000 மாட்டு இனங்கள், 60,000 ஆட்டு இனங்கள் மற்றும் 7,50,000 கோழி இனங்கள் உள்ளன. இவற்றிற்கு மருத்துவச் சேவைகள் வழங்கிட 7 கால்நடை மருந்தகங்கள் மற்றும் மூன்று கால்நடைக் கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது ஜீனூர் கால்நடைக் கிளை நிலையம் வாடகையில்லா கட்டடத்தில் இயங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறைந்தபட்சம் 20 சென்ட் நிலத்தை இலவசமாக துறைக்கு வழங்கும்பட்சத்தில், கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்திட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2018 ஜூலை 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.*

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருந்தகம் அமைப்பதற்கு, அந்தப் பகுதி மக்களிடம் பேசி, இடத்தைத் தருவதற்கு நானே ஏற்பாடு செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதுமட்டுமல்லாமல், கிருஷ்ணகிரி நகரில் நீண்ட காலமாக ஒரேயொரு உதவி மருத்துவருடன் செயல்படும் கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாக அவசியம் தரமுயர்த்தித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கே. மோட்டூரில் உள்ள கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதியில் நீண்ட காலமாக எழுப்பப்படும் எனது கோரிக்கை, பையூர், ஜகதாப், கரடிஹள்ளி, கம்மம்பள்ளி, சோக்காடு, அகசிப்பள்ளி, கனகமுட்லு, சிக்கப்பூவத்தி மற்றும் எனது சொந்தக் கிராமமான வெலகலஹள்ளி ஆகிய கிராமங்களிலுள்ள மக்களின் நலன் கருதியும், விவசாயிகளுடைய சிரமத்தைக் குறைத்திடும் வகையிலும், புதிய கால்நடை கிளை நிலையங்களைத் துவக்க வேண்டுமென்பதாகும். இதுகுறித்து அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. ஆகவே, மேற்கண்ட எனது கோரிக்கையினை நிறைவேற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளிலெல்லாம் உரிய ஆய்வுகள் ஏற்கெனவே செய்யப்பட்டுள்ளதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் துறை அதிகாரிகளையெல்லாம் வரவழைத்துப் பேசி, சாத்தியக்கூறுகள் இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளில் கால்நடை கிளை நிலையங்கள் அமைப்பதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியிலே நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

திருப்பூர் வடக்கு தொகுதியில் திருப்பூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலே சொக்கனூர் ஊராட்சியில், ஏற்கெனவே, கடந்த பத்து ஆண்டுகளாக கால்நடை கிளை நிலையம் உள்ளது. அந்தக் கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கால்நடை கிளை நிலையம் விதிகளுக்குட்பட்டு இருக்கும்பட்சத்தில், அதனைக் கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்துவதற்கு ஆவன செய்யப்படும் என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருமே எங்களிடத்தில் கால்நடை கிளை நிலையங்களுக்கு மருத்துவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில், வழக்கு நீதிமன்றத்தில் இருந்தாலும்கூட, சேவை பாதிக்கப்படக் கூடாது என்கின்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், ஏறத்தாழ 850 கால்நடை மருத்துவர்களை ஒப்பந்த அடிப்படையில் கூடிய விரைவில் பணி நியமனம் செய்வதற்குண்டான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்கின்ற மகிழ்ச்சியான செய்தியை இந்தப் பேரவையிலே தெரிவித்து, அமைகிறேன்.

2018 ஜூலை 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட ஆயக்குடி பேரூராட்சிப் பகுதியில் தற்போது இயங்கி வருகிற கால்நடை மருந்தகத்தையொட்டி கிட்டத்தட்ட 40 கிராமங்கள் உள்ளன. அந்தக் கிராமங்களில் 10,000–க்கும் மேற்பட்ட கால்நடைகள் அடர்வு இருக்கின்ற காரணத்தினால், அங்குள்ள கால்நடை மருந்தகத்தைக் கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதிகளின்படி ஒரு கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்த வேண்டுமென்று சொன்னால், தினந்தோறும் சிகிச்சைக்கு வருகின்ற கால்நடைகளின் எண்ணிக்கை 40–க்கும்மேல் இருத்தல் வேண்டும். அதேபோல உள்நோயாளி பிரிவு, ஊடுகதிர்கருவிப் பிரிவு போன்ற வசதிகளை உருவாக்குவதற்கு போதிய இட வசதி இருத்தல் வேண்டும். இதுபோன்ற வசதிகள் இருக்கின்றபட்சத்தில் துறை அதிகாரிகளை அனுப்பி வைத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. சி.வி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் தேவைகளை அறிந்து மக்கள் கேட்காமலேயே அவற்றையெல்லாம் நிறைவேற்றி, 'மக்களால் நான், மக்களுக்காகவே*

நான்' என்று வாழ்ந்து மறைந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா அவர்களின் நல்லாசியோடு தமிழகத்தில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். மேலும், அவருக்கு உறுதுணையாக இருந்து அரசை வழிநடத்தி வரும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். எங்களுடைய மாவட்ட அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். தங்களையும் வணங்குகிறேன்.

என்னுடைய பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குட்டூர் ஊராட்சியானது, ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் அதிகம் வசிக்கின்ற பகுதி. அந்தப் பகுதியில் 5,000–க்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. அங்குள்ள மக்கள் கால்நடை மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்றால், 10 கி.மீ. தூரத்தில் உள்ள பர்கூருக்கோ அல்லது மத்தூருக்கோதான் செல்ல வேண்டும். ஆகவே, அப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று, குட்டூர் ஊராட்சியில் ஆம்பள்ளி என்ற கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டுமென்றால், அரசு விதிகளின்படி 3,000–க்கும் மேற்பட்ட அலகுகள் இருக்க வேண்டும். அதேபோல், அருகில் இருக்கக்கூடிய கால்நடை கிளை நிலையங்களுக்கு இடைப்பட்ட தூரம், 3 கி.மீ.–க்குமேல் இருத்தல் வேண்டும். அப்படி இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தப் பகுதிக்கு துறை அதிகாரிகளை அனுப்பி வைத்து, தேவைப்படுமாயின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 267, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.